# இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகம்-2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 உயர் கணக்கீட்டு நியதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் வெளிவாரிப் பாடநெறிகள் செயற்திட்ட வருமானம் காலப்பகுதியின் படி இனங்காணப்படாது அச் செயற்திட்டத்தின் ஆண்டிற்கான செலவாகிய ரூபா 7,530,559 இற்குச் சமனான பெறுமதி ஆண்டின் வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வெளிவாரிப் பாடநெறி வருமானம் ரூபா 14,886,741 ஆகக் காணப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தால் தொடர்ந்தும் இக் கொள்கை பின்பற்றப்பட்ட காரணத்தால் வெளிவாரிப் பாடநெறி செயற்திட்ட வருமானக் கணக்கின் திரண்ட மீதி ரூபா 19,405,271 ஆகக் காணப்பட்டது.

(ஆ) கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினமும் ஏனைய கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினமும் காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ்

கணக்கிடப்பட்டிருந்த ரூபா 1,900,263 தொகையான அபிவிருத்திச் செலவினம் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டு மேலும் பயன்பாட்டிற்காக எடுக்கப்படும் ரூபா 3,967,951 தொகையான 03 சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட ரூபா 173,002,862 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் வணக்கத்திற்குரிய மஹோபாத்தியாயருக்கு 2013 ஏப்ரல் 19 ஆம் திகதிய 13(7)(ஏ) விபரமான அறிக்கையின் மூலம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் அக் குறைபாடுகளில் ரூபா 14,639,113 தொகை சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 17 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

**1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தங்களின் அடிப்படையில் பிடித்து வைத்தல் மீதியான ரூபா 12,252,176 தொகையில் 2 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த மீதி ரூபா 11,172,763 ஆகக் காணப்பட்டதுடன் இத் தொகையில் 2005 முதல் 2007 வரை இரண்டு ஒப்பந்தங்களிலிருந்து பிடித்து வைத்த பணம் ரூபா 10,880,640 ஆகக் காணப்பட்டது. இந்த ஒப்பந்தம் குறித்த காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நானாவித கடன்கொடுத்தோரில் உள்ளடக்கப்பட்ட ரூபா 483,450 தொகையான ஊழியர் வைப்பும் ரூபா 257,040 தொகையான பாதுகாப்பு

வைப்பிற்குமான மீதிகளை உறுதிப்படுத்தல்கள் அல்லது பணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 142,270,681 தொகையான மீண்டெழும் செலவினத்திற்கான (வெளிவாரி செயற்திட்டச் செலவினம் உள்ளடங்கலாக) பேரேட்டுக் கணக்குகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அச்செலவுகளை கணக்கீடு செய்தலினதும் வகைப்படுத்தலினதும் சரியான தன்மை குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சான்றுகள் இருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) பல்கலைக்கழக தாபனவிதிக்கோவை | |
| XXVI ஆம் அத்தியாயம் 2.1 ஆம் பந்தி | உயர் கல்வி நிறுவகங்களின் சகல பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையால் வருடாந்தம் சரி பிழை பார்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 13,434,024 தொகையான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது | ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு பணத்தை |

| | | |
|---|---|---|
| | முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | செலுத்துகையில் கல்விசார் படிகள் கருத்திற்கொள்ளப்பட்ட காரணத்தால் 1997 ஆம் ஆண்டு முதல் 2011 ஆகஸ்ட் வரை ரூபா 4,155,912 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பல்கலைக்கழக கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2012 மே 29 ஆம் திகதி நடாத்தப்பட்ட 325 ஆம் இலக்க நிர்வாகச் சபைத் தீர்மானம் | விரிவுரைக்காக 80 சதவீதத்திற்கும் மேல் கலந்து கொண்ட மாணவர்கள் மாத்திரம் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்கு முரணாக தங்குமிடவசதியுடனான பல்கலைக் கழகமான இப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் வருகை 40 சதவீதம் வரை குறைக்கப்பட்டு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மேல்முறையீட்டுக் கல்விக் குழு அனுமதியளித்திருந்த போதிலும் 40 சதவீத வருகை இல்லாத 07 மாணவர்களுக்கும் பரீட்சை எழுதுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 129,532,400 பற்றாக்குறையானதுடன் முன்னைய ஆண்டிற்கான இதனோடொத்த பற்றாக்குறை ரூபா 154,471,836 ஆகக்

காணப்பட்டமையால் பற்றாக்குறையில் ரூபா 24,939,436 குறைவு அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் செலவிற்காக பெறப்பட்ட ரூபா 119,347,880 அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 10,184,520 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 62,152,897 ஆனமையால் நிதிவிளைவுகளின் அதிகரிப்பு ரூபா 51,968,377 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் செலவிற்கான அரசாங்க மானியம் ரூபா 27,028,941 தொகையால் கூடுதலாகக் கிடைக்கப்பெற்றமையாலும் அரசாங்க ஏற்பாடு ரூபா 47,534,691 தொகையால் காலக்கழிவிடப்பட்டமையும் இதற்கு முக்கியமான காரணமாகியது.

## 3. செயற்பாடு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பௌத்த சமயத்தைப் பரப்புதல் மற்றும் தர்ம போதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பௌத்த தர்ம மற்றும் ஒழுக்கம் தொடர்பாக கல்வியியலாளர்களுக்கு பயிற்றுவித்தல் முக்கிய நோக்கமாவதுடன் மீளாய்வாண்டின் போதும் கடந்த நான்கு ஆண்டுகளின் போதும் சாதாரண பட்டப்படிப்பிற்காக உள்ளக மாணவர்களாக விண்ணப்பித்த மற்றும் சேர்த்துக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| **ஆண்டு** | **விண்ணப்பித்த எண்ணிக்கை** | | **சேர்க்கப்பட்ட எண்ணிக்கை** | |
|---|---|---|---|---|
| | **உள்நாடு** | **வெளிநாடு** | **உள்நாடு** | **வெளிநாடு** |
| 2008 | 293 | 61 | 109 | 61 |
| 2009 | 196 | 74 | 109 | 74 |
| 2010 | 353 | 45 | 109 | 45 |
| 2011 | 305 | 48 | 110 | 48 |
| 2012 | 379 | 46 | 107 | 36 |

2012/ 2013 கல்வியாண்டிற்காக மாணவர்களின் ஆட்சேர்ப்பு 2012 நவம்பர் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டின் முதலாம் ஆண்டின் பாடநெறி 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை எய்துவதற்கு ஏற்ற வகையில் நடைமுறைச் சாத்தியமான, ஆக்கபூர்வமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டு பல்கலைக்கழகப் பட்டப் பாடவிதானத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 1984 முதல் 2012 வரையான காலப்பகுதியின் போது கலாநிதி, தத்துவமானி, முதுகலைமானிப் பட்டங்கள், டிப்ளோமாக்கள் ஆகிய பரீட்சைகளில் 6283 பேர் சித்தியெய்தியவர்களை உருவாக்கிய போதிலும் மேற்குறித்த நோக்கங்களை எய்துவது தொடர்பில் பல்கலைக்கழகத்தால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மாணவர் கிரயம்

மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 359 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 189,805,371 ஆனதுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 528,706 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் 519 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 167,851,717 ஆகவும் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 323,414 ஆகவும் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 205,292 ஆல் அதாவது 63.48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளும் 2011 பாதீட்டின் மூலம் இதற்கு பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் அரசாங்க நிறுவகங்களில் நிரந்தர ஊழியர்களின் மாதாந்தம் இலாபம் ரூபா 50,000 அல்லது வருடத்திற்கு

ரூபா 600,000 இற்கு மேலான தொகையைப் பெறும் ஊழியர்கள் 2011 ஆம் ஆண்டின் ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் உழைக்கும் போதே செலுத்தும் முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டு வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான வரித்தொகை கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஏப்ரல் 07 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 45 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் 2011 ஆம் ஆண்டிற்காக 24 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,986,800 ஆராய்ச்சிப் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்த சுற்றறிக்கையின் 4(அ) பந்தியின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உரிய குழுவிற்கு 5 ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டமைக்கான சான்றுகள் இல்லாத 24 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,371,085 ஆய்வுப் படிப்பணம் 2012 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பௌத்த கல்வி மற்றும் பாலி மொழிக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளுக்கு உதவியளிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஜியூன் பௌத்த ஆய்வு மற்றும் வெளியீட்டு நிதியம் 2006 இன் பின்னர் உரிய நோக்கத்தை எய்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் நிதிய மீதி ரூபா 1,824,042 ஆகக் காணப்பட்டது.

## 3.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புலமைப் பரிசு, பரிசு மற்றும் ஏனைய நிதியங்களிலிருந்து நோக்கங்களை எய்துவதற்குப் போதிய பணம் சேமிப்புக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டு மிகுதி முதலீடு செய்யப்பட்டு வருமானம்

உழைக்கப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த வங்கிக் கணக்குகளில் வருட இறுதியில் நிலவிய ரூபா 5,655,459 தொகையான மீதி ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 மற்றும் 2012 கல்வி ஆண்டுகளின் போது பரீட்சைப் பெறுபேறுகள் திட்டமிடப்பட்டவாறு வெளியிடப்பட்டிராமையால் பரிசுகளும் புலமைப்பரிசுகளும் வழங்கப்படுகையில் 6 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

## 3.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

2004 ஆம் ஆண்டு முதல் ரூபா 512 மில்லியன் செலவில் சகல வசதிகளுடனான நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு ஒப்பாக கூடுதலான மாணவர்கள் சேர்க்கப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டின் போது 379 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் 107 மாணவர்களே சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கட்டிட நிர்மாணிப்பு**

கூட்டிணைந்த திட்டத்தில் 2012 ஆம் ஆண்டின் போது எய்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிட நிர்மாணச் செயற்திட்டத்திற்காக ஆண்டின் நிதி மதிப்பீட்டில் ரூபா 234.5 மில்லியன் தொகை திறைசேரியால் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தினால் இதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. இச் செயற்பாட்டை அடுத்துவரும் ஆண்டிலேனும் மேற்கொள்வதற்கு தேவையான வகையில் 2012 – 2016

கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நூலக நடவடிக்கைகள்**

2012 – 2016 கூட்டிணைந்த திட்டத்தில் 2012 ஆம் ஆண்டின் போது நூலகம் தொடர்பாக அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளில் விஞ்ஞான நாளேடுகளைத் தயாரித்தல், கொள்கை வெளியீட்டைத் தயாரித்தல் மற்றும் இணையதள சேவைகளை விஸ்தரித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

காணி மற்றும் கட்டிடங்களை சுவீகரிப்பதற்காக ரூபா 101,920,000 பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் விரைவாகச் செயற்படுத்தப்பட்டிராத காரணத்தினால் ரூபா 50,000,000 தொகை நி.பி.66 இன் மூலம் உயர் கல்வி அமைச்சால் மாற்றப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் வணக்கத்திற்குரிய மஹோபாத்தியாயரின் கவனத்திற்குக் அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) நூலக முகாமைத்துவம்
(இ) நிர்மாணிப்புகள்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) வெளியக செயற்திட்டங்களுக்கான கணக்கீடு
(ஊ) வாகனக் கட்டுப்பாடு